DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 276/2024 |
| Deposition of Witness for | : | P.W. 4 |
| Name | : | இந்திராணி |
| Husband Name | : | கணேசன் |
| Village | : | செல்லப்பனேந்தல் |
| Taluk | : | திருப்புவனம் |
| Calling | : | House wife |
| Age | : | 37/2025 |

**(வழக்கின் எதிரி ஆஜர். .)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 03.06.2025

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது திருப்புவனம் மாதவன் நகரில் குடியிருந்து வருகிறேன். செல்லப்பனேந்தலில் எனக்கு சொந்தமான வீடு உள்ளது. அ.சா.1 முதல் 3 வரை தெரியும். வழக்கின் ஆஜர் எதிரி எனக்கு தெரியும். அனைவரும் எனக்கு உறவுக்காரர்கள். 26.03.2024 ம் தேதி மதியம் 3.00 மணியளவில் திருப்புவனத்தில் உள்ள எனது வீட்டில் இருந்தேன். அ.சா.1 கடம்பவள்ளி யின் வீட்டுக்கருகில்குடியிருக்கும் எனது அம்மா மாரி எதிரி வெட்டிவிட்டதாக போன் மூலமாக சொன்னார். எதிரி கடம்பவள்ளியை வெட்டிவிட்டதாக சொன்னார். நான் மதுரையில் உள்ள வேலம்மாள் தனியார் மருத்துமனைக்கு சென்று பார்த்தேன். அ.சா.1, 2 மற்றும் அவரது அம்மா மல்லிகா ஆகியோர்களை பார்த்தேன். மறு நாள் நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது மல்லிகாவிற்கு தலையின் பின்புறத்திலும், அழகுநித்யாவிற்கு கையிலும், கடம்பவள்ளிக்கு லேசான காயம் இருந்தது. நான் அவர்களுக்கு காயம் எவ்வாறு காயம்பட்டது என்று கேட்கவில்லை. 23.06.2024 ம் தேதி மதுரை வேலம்மாள் மருத்துவமனையில் வைத்து தற் போது காட்டப்படும் அ.த.சா.ஆ.1 ல் உள்ள

இந்திராணி என்ற கையொப்பத்தை திருப்புவனம் போலிசார் பெற்றுக்கொண்டனர். புகார் கொடுக்கும்போது சாட்சிக்காக கையொப்பம் போட்டுக்கொடுக்க சொன்னார்கள். அ.த.சா.ஆ.1ல் உள்ள இந்திராணி என்ற கையொப்பம் என்னுடையதுதான். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

செல்லப்பனேந்தல் கிராமத்திற்கும் நான் வசிக்கும் இடத்திற்கும் சுமார் 1 கிமீ இருக்கும். எனது அம்மா எனக்கு 3.00 மணியளவில் தகவல் தெரிவித்தார். முதல் நாளன்று காயம்பட்டவர்களை பார்க்க சென்றேன். என்னை பர்க்கவிடவில்லை பின்பு மூன்று நாட்கள் கழித்து நான் காயம்பட்டவர்களை பார்க்கசென்று காயம்பட்டவர்களை பார்த்து பேசினேன். என்னிடம் காட்டப்படும் அ.த.சா.ஆ.1 புகாரில் காட்டப்படும் சாட்சி கையெழுத்து என்னுடையது இல்லை என்றால் சரிதான். எதிரிக்கும் புகார்தாரருக்கும் என்ன குடும்ப பிரச்சினை என்று எனக்கு தெரியாது. அவர்கள் சேர்ந்து வாழ்கிறார்களா பிரிந்து வாழ்கிறார்களா என்று எனக்கு தெரியாது.

*/Sd./*Thiru.A.Pasumpon Shunmugiah,
**Chief Judicial Magistrate,**
**Sivagangai.**